தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# உணவுப் பொட்டலங்களில் உள்ள லேபிள்களில், விவரங்களை பதிவிட்டு இருப்பது கட்டாயமா? திமுக எம்.பி தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி ?

******

**கேள்வி :**

அ) தயாரிப்பு நிறுவனங்கள், அதன் ஊட்டச்சத்துக் கூறுகளை கண்டறிய உணவு லேபில்களில் உள்ள பொருட்களை மற்றும் ஊட்டச்சத்துக்களின் மதிப்பு மற்றும் அளவு பற்றிய அனைத்து விவரங்களையும் பதிவிட்டு இருப்பது கட்டாயமா?

ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? இல்லையெனில், தாமதத்திற்கான காரணங்கள் என்ன?

இ) பதிவு செய்யப்பட்ட மற்றும் அடைக்கப்பட்ட உணவுகள் பிற உணவுப் பொருட்களுக்கும் ஹெல்த் ஸ்டார் HSR மதிப்பீடு வழங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

ஈ) அப்படியானால், அதன் விவரங்களை தெரிவிக்கவும். இல்லை என்றால் அதற்கான காரணங்களைத் தெரிவிக்கவும். மற்றும், பெட்டிகளில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்களின் அளவு மற்றும் மொத்த எண்ணிக்கையிலான குறித்த தகவல்கள் அரசிடம் உள்ளதா?

மேலும், அடைக்கப்பட்ட உணவு பொருட்களுக்கு FSSAI சான்று அளிக்கப்பட்டது மற்றும் அதன் விவரங்கள் என்ன?

**<u>சுகாதாரம் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் டாக்டர். பாரதி பிரவீன் பவார் அவர்களின் பதில்</u>**

(அ, ஆ) உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் FSSAI உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலைகளை லேபிளின் மற்றும் டிஸ்ப்ளே விதிமுறைகள் 2020, அடைக்கப்பட்ட உணவை லேபிள் இடுவதற்கான அவசியத்தை பரிந்துரைத்துள்ளது. ஒழுங்குமுறை நடவடிக்கையாக, ஊட்டச்சத்துக்கள் மற்றும் அவற்றின் பங்களிப்பை பரிந்துரைக்கப்பட்ட தினசரி கொடுப்பளவு RDA வை, பெட்டியின் பின்புறத்தில் ஊட்டச்சத்துக்களின் தகவல்களாக பதிவேற்ற வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யவுள்ள அனைத்து உணவு பொருட்களும், ஒற்றை மூலப்பொருள் உணவைத் தவிர, அவற்றின் கலவையின் இறங்கு வரிசையில் உள்ள பொருட்களின் பட்டியல் மற்றும் எடை அளவு அடிப்படையில் குறிப்பிடப்பட வேண்டும் உணவு வணிகர்கள் SBOs இந்த விதிமுறைகளின் படி உணவுப் பொட்டலத்தை வெளியிடுவது கட்டாயமாகும்.

(இ, ஈ) 2022 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் FSSAI உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலையின் லேபிளிங் அண்ட் டிஸ்ப்ளே இடம்பெற வேண்டும். திருத்தப்பட்ட விதிமுறைகள் கீழ்க்கண்ட இணைய பக்கத்தில் உள்ளன.
https://fssai.gov.in/upload/uploadfiles/files/Draft

******